
# ஈழத்து எழுத்தாளர்கள் படைத்த சிறுவர் நூல்கள்



தொகுப்பு:
என்.செல்வராஜா
(தொகுப்பாசிரியர்-நூல்தேட்டம்)



## ஒழுக்கவியல் நூல்கள்

### 1 உங்களைப்பற்றி: சிறுவருக்கு அறிவுரை நூல்.

நந்தி. கொழும்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340 செட்டியார் தெரு, 2வது பதிப்பு, 1995. 1வது பதிப்பு, 1973. (கொழும்பு 11: லட்சுமிஹுர, 309, செட்டியார் தெரு) 48 பக்கம், விலை: ரூபா 45. அளவு: 18X12.5 சமீ

சமய வாழ்வு, கால வர்த்தமானத்துக்கு ஏற்ப நற்பண்புகளைக் கொண்ட சமுதாயத்தை உருவாக்கும் வகையில் சிறுவர்களுக்கு அறிவு பூர்வமாக சிந்தனைகளை ஊட்டும் முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட கட்டுரைத் தொடர். வெற்றிமணி இதழில் பிரசுரம் பெற்ற இதன் முதற்பதிப்பு வெற்றிமணி வெளியீடாக 1973 இல் வெளியாகியுள்ளது.

### 2 ஔவையார் அறிவுச் செல்வங்கள்.

கொழும்பு 2: இந்து சமய இந்து கலாச்சார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு அலுவலகம், 1வது பதிப்பு, 1990. (கொழும்பு 10: இம்பீரியல் பிரஸ்) 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 18X12 சமீ.

ஔவையார் அருளிச்செய்த வாக்குண்டாம், ஆத்திசூடி, நல்வழி, ஆகிய நூல்கள் எளிதில் விளங்கிக்கொள்ளத்தக்கதான உரையுடன் கூடியதாக இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

### 3 தந்தையின் பரிசு

ஆ.கந்தையா. நுகேகொடை: ஆ.கந்தையா, திறந்த பல்கலைக்கழகம், நாவலை, 1வது பதிப்பு, அக்டோபர் 1986. (கொழும்பு 14: ஸ்டார்லைன் அச்சகம்) (6), 126 பக்கம். விலை: ரூபா 30. அளவு: 18X12.5 சமீ.

நூலாசிரியர் இங்கிலாந்தில் இருந்த 1984ம் ஆண்டுக் காலகட்டத்தில் அங்கிருந்து தனது மகனுக்கு எழுதுவதாக அமைந்த 20 கடிதங்களின் தொகுப்பு. அரசியல், சமூக விடயங்கள் பலவற்றை அலசுவதாக அமைகின்றது. இளைஞர்களுக்கான அறிவியல், ஒழுக்கவியல் கருத்துக்களை வலியுறுத்துகின்ற கட்டுரைகள்.